


21.06.2024

தலைப்புச் செய்திகள்

1. உடல், மனநலம், ஆன்மீக வளர்ச்சிக்கு யோகா பயிற்சி இன்றியமையாதது என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

2. கள்ளக்குறிச்சி விஷசாராயம் சம்பவத்தில் உயிரிழந்தோர் குழந்தைகளின் கல்வி கட்டணத்தை அரசே ஏற்கும் என்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

3. தமிழக சட்டப்பேரவையிலிருந்து அஇஅதிமுக உறுப்பினர்கள் இன்று வெளியேற்றப்பட்டனர்.

4. கள்ளக்குறிச்சியில் கள்ளச்சாராய விற்பனை தொடர்பாக அரசுக்கு புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்காதது ஏன் என்று சென்னை உயர்நீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.

5. வெனிடோ ஓப்பன் டென்னிஸ் மகளிர் ஒற்றையர் காலிறுதியில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா இன்று களமிறங்குகிறார்.

இனி விரிவான செய்திகள்

ழுழுழுழுழுழுழுழுழு

யோகா பிரதமர்

உடல்நலம், மனவளம், ஆன்மீக வளர்ச்சிக்கு யோகா பயிற்சி இன்றியமையாதது என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்திருக்கிறார்

10-வது சர்வதேச யோகதினத்தை ஒட்டி ஜம்காஷ்மீரின் ஸ்ரீநகரில் இன்று நடைபெற்ற பிரம்மாண்ட யோகா நிகழ்ச்சியில் யோக பயிற்சிகளை மேற்கொண்டு

உரையாற்றிய அவர் உலக அளவில் யோககலையின் சிறப்பு பரவி வருவதாக கூறினார்.

தம்முடன் உரையாற்றும் உலக தலைவர்கள் பெரும்பாலானோர் யோகாவை பற்றி தம்முடன் பேசுவதாக மகிழ்ச்சி தெரிவித்தார்.

துருக்கி, சவுதி அரேபியா மங்கோலியா ஐரோப்பா, ஜெர்மனி உள்ளிட்ட நாட்டின் பல பகுதிகளில் யோகா பயிற்சிகள் மேற்கொள்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக கூறினார்.

யோக கலை வளர்ந்து வருவதன் மூலம் இளைஞர்களுக்கு புதிய வேலை வாய்ப்புகள் இப்பிரிவில் உருவாவதாக எடுத்துரைத்தார்.

தனிநபருக்கும் சமூகத்திற்கும் யோகா என்ற இந்தாண்டின் கருப்பொருளை சுட்டிக்காட்டிய அவர் சர்வதேச நலத்திற்கு உகந்ததாகவும், கடந்த கால சுமைகளை ஒதுக்கிவைத்து நிகழ்காலத்தில் வாழ யோகா பெரிதும் பயனளிப்பதாக கூறினார்.

இத்தினத்தை ஒட்டி நாடுமுழுவதும் பல்வேறு யோகா சார்ந்த நிகழ்ச்சிகள் இன்று நடைபெற்று வருகின்றன.

கோவையில் நடைபெற்ற யோகா நிகழ்ச்சியில் உரையாற்றிய மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் நமது முன்னோர்கள் நமக்கு அளித்த கொடை யோகா எனவும், இதன்மூலம் ஒருமைப்பாடும், மன நலமும் மேம்படும் என்று கூறினார்.

வாய்ஸ்

ராமநாதபுரத்தில் நடைபெற்ற யோகா நிகழ்ச்சியில் மத்திய பாதுகாப்புத்துறை இணை அமைச்சர் திரு.சஞ்சய் சேத்து பங்கேற்றார்.

ழுழுழுழுழுழுழுழுழுழு

யோகா குடியரசுத்தலைவர்

உடல் மனம் மற்றும் ஆன்மீக நல்வாழ்விற்கு சிறந்த வழியாக விளங்கும் யோகாவை அன்றாட வாழ்வின் ஓர் அங்கமாக அனைவரும் ஏற்க வேண்டும் என்று குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

ழுழுழுழுழுழுழுழுழுழு

யோகா ஆளுநர்

கோவை வேளாண் பல்கலைகழகத்தில் மாணாக்கருடன் இணைந்து யோகா பயிற்சி மேற்கொண்ட தமிழக ஆளுநர் திரு.ஆர்.என்.ரவி யோகாசனம் உடலுக்கும் மனதிற்கும் ஆன்மாவிற்கும் நலம் தரும் என்றார்.

ழுழுழுழுழுழுழுழுழுழு

அண்ணாமலை

கோவையில் யோகா நிகழ்ச்சியில் பங்கேற்ற பிஜேபி மாநிலத்தலைவர் திரு.அண்ணாமலை அலைபேசிகளின் பயன்பாடு, சமூகவலைதளங்களின் ஆதிக்கம் அதிகரித்துள்ள சூழலில் மன நலம் சார்ந்த பாதிப்புகளுக்கு யோகா சிறந்த தீர்வாக அமையும் என்று கூறினார்.

ழுழுழுழுழுழுழுழுழுழு

யோகா மாவட்டங்கள்

திருச்சி தேசிய தொழில் நுட்ப கல்விக்கழகத்தில் மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் மக்கள் தொடர்பக அலுவலகம் சார்பில் நடைபெற்ற யோகா நிகழ்ச்சியில் ஏராளமான மாணாக்கர் பங்கேற்றனர்.

திருவாரூர் மாவட்டம் நீலக்குடியில் தமிழ்நாடு மத்திய பல்கலைகழகத்தில் 100க்கும் மேற்பட்ட மாணாக்கர் யோகா பயிற்சியில் ஈடுபட்டனர்.

நாமக்கல்லில் கல்வி நிறுவனங்கள் பொதுநல அமைப்புகள் சார்பில் யோகா விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

தஞ்சை பெரியகோவில் அருகே அமைந்துள்ள பெத்தனன் கலையரங்கத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் ஒரே இடத்தில் யோகா பயிற்சி மேற்கொண்டனர்.

திருப்பூரில் நடைபெற்ற யோகா தின நிகழ்ச்சியில் ஜெர்மன் நாட்டை சேர்ந்த ஏராளமானோர் பங்கேற்றனர்.

பெரம்பலூர், தர்மபுரி, மயிலாடுதுறை, உள்ளிட்ட மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் யோகா தினத்தில் நூற்றுக்கணக்கானோர் பங்கேற்றனர்.

ழுழுழுழுழுழுழுழுழுழு

நிர்மலா சீதாராமன்

2024 – 25 நிதியாண்டிற்கான மத்திய அரசின் பொது பட்ஜெட் தொடர்பாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் விவசாய சங்கங்கள் மற்றும் வேளாண் நிபுணர்களுடன் புதுதில்லியில் இன்று ஆலோசனை மேற்கொண்டார்.

மத்திய நிதித்துறை இணை அமைச்சர் திரு.பங்கஜ் சவுத்ரி மற்றும் நிதித்துறை உயர் அதிகாரிகள் இதில் பங்கேற்றனர்.

நிதியமைச்சர் இதுவரை நிதி வல்லுநர்கள் முதலீட்டு சந்தை பிரிவினர், தொழில் நிறுவன தலைவர்கள், தொழிற்சங்கங்கள் மற்றும் பொருளாதார நிபுணர்களுடன் பட்ஜெட்டுக்கு முந்தைய ஆலோசனைகளை மேற்கொண்டார்.

ழுழுழுழுழுழுழுழுழுழு

ஷேக் ஹசீனா

பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா 2 நாள் பயணமாக இன்று இந்தியா வருகிறார்.

பிரதமர் திரு.நரேந்திரமோடி மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் உள்ளிட்டோரை சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து முக்கிய பேச்சுவார்த்தை மேற்கொள்கிறார்.

ழுழுழுழுழுழுழுழுழுழு

முதலமைச்சர் உரை

கள்ளக்குறிச்சி விஷசாராயம் சம்பவத்தில் உயிரிழந்தவர்களுடைய குழந்தைகளின் கல்வி கட்டணத்தை உயர்கல்வி வரை அரசே ஏற்கும் என்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் எதிர்கட்சி உறுப்பினர்கள் கொண்டுவந்த சிறப்பு கவன ஈர்ப்பு தீர்மானத்திற்கு இன்று பதில் அளித்து பேசிய முதலமைச்சர் பெற்றோரை இழந்த குழந்தைகளின் பெயரில் வங்கியில் 5 லட்சம் ரூபாய் வைப்புத்தொகை செலுத்தப்படும் என்றார்.

இக்குழந்தைகள் 18 வயதை அடையும்போது வைப்புத்தொகை வட்டியுடன் வழங்கப்படும் என்றும் தெரிவித்தார்.

மேலும் பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு 18 வயதுவரை மாதம் 5 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்றும் கூறினார்.

இச்சம்பவத்தால் பாதிக்கப்பட்ட 164 பேரில் 117 பேர் உள் நோயாளிகளாக சிகிச்சை பெற்று வருவதாகவும், திருச்சி சேலம் விழுப்புரம் செங்கல்பட்டு மாவட்டங்களிலிருந்து 57 மருத்துவர்கள் கள்ளக்குறிச்சிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

விஷ சாராயம் புதுச்சேரியிலிருந்து கொண்டுவரப்பட்டு விற்பனை செய்யப்பட்டது விசாரணையில் கண்டறியப்பட்டுள்ளதாகவும், 200 லிட்டர் மெத்தனால் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இச்சம்பவத்தில் இதுவரை 47 பேர் உயிரிழந்திருப்பதாகவும், விஷ சாராயத்தை விற்பனை செய்த 3 பேர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் முதலமைச்சர் குறிப்பிட்டார்.

இச்சம்பவம் குறித்து விரிவான அறிக்கை ஓரிரு நாட்களில் ஆய்வு செய்து சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டுள்ளதாக கூறிய முதலமைச்சர் அறிக்கை கிடைத்தவுடன் சம்மந்தப்பட்டவர்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்தார்.

கள்ளச்சாராயத்தை ஒழிக்க தொடர் நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருவதாகவும் கூறினார்.

ழுழுழுழுழுழுழுழுழுழு

சட்டப்பேரவை அஇஅதிமுக வெளிநடப்பு

முன்னதாக அவை இன்று காலை தொடங்கியதும் கேள்வி நேரத்தை ஒத்திவைத்துவிட்டு கள்ளக்குறிச்சி விஷ சாராய சம்பவம் தொடர்பாக விவாதிக்க கோரி சிறப்பு கவன ஈர்ப்பு தீர்மானத்தை சட்டப்பேரவை எதிர்கட்சி தலைவர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி கொண்டு வந்தார்.

கேள்வி நேரத்திற்கு பின்னர் இதுதொடர்பாக விவாதிக்கப்படும் என்று பேரவைத்தலைவர் தெரிவித்த நிலையில் இதனை ஏற்க மறுத்து அஇஅதிமுக உறுப்பினர்கள் தொடர் அமளியில் ஈடுபடவே அவைக்காவலர்களால் பேரவையிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

மேலும் இன்று ஒருநாள் பேரவை நிகழ்ச்சிகளில் பங்கேற்க அவர்களுக்கு அனுமதியில்லை என்றும் பேரவைத்தலைவர் அறிவித்தார்.

ழுழுழுழுழுழுழுழுழுழு

கேள்வி நேரம்

தமிழகத்தில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு சட்டக்கல்லூரி அமைக்க வேண்டும் என்பதே அரசின் நோக்கம் என்று மாநில சட்ட அமைச்சர் திரு.எஸ்.ரகுபதி தெரிவித்துள்ளார்.

பேரவையில் கேள்வி நேரத்தின் போது இன்று இதனை தெரிவித்த அவர் ஒவ்வொரு வட்டத்திற்கும் ஒரு நீதிமன்றம் அமைக்க அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக கூறினார்.

மதுரை மாவட்டத்தில் பல்வேறு பாலங்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதாக மாநில பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு கூறினார்.

தொப்பூர் சாலைக்கு நிலம் கையகப்படுத்தும் பணிகள் முடிக்கப்பட்டு விரைவில் பணிகள் தொடங்கும் என்றும் அவர் கூறினார்.

ழுழுழுழுழுழுழுழுழுழு

ஒருநபர் ஆணையம்

கள்ளக்குறிச்சி சம்பவம் தொடர்பாக தமிழக அரசால் அமைக்கப்பட்ட ஒருநபர் ஆணையக்குழுவின் தலைவர் ஓய்வு பெற்ற நீதியரசர் கோகுல் தாஸ் கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுடன் இன்று ஆய்வை தொடங்கினார்.

ழுழுழுழுழுழுழுழுழுழு

நீதிமன்றம்

கள்ளக்குறிச்சி பகுதியில் கள்ளச்சாராய விற்பனை தொடர்பாக அரசுக்கு புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்காதது ஏன் என்று சென்னை உயர்நீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.

இதுதொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட பொதுநல மனு மீது விசாரணை மேற்கொண்ட நீதிபதிகள் கிருஷ்ணகுமார், குமரேஷ்பாபு ஆகியோர் கொண்ட அமர்வு அரசு நடவடிக்கை எடுத்திருந்தால் இந்த சம்பவம் தடுக்கப்பட்டிருக்கும் என்று கூறினர்.

கள்ளக்குறிச்சி மரக்காணம் விஷ சாராய பலிகள் தொடர்பாக வழக்குகளில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து விரிவான அறிக்கை தாக்கல் செய்யவும் தமிழக அரசிற்கு நீதிமன்றம் ஆணையிட்டுள்ளது.

ழுழுழுழுழுழுழுழுழுழு

வானிலை

மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக தமிழகத்தில் ஓரிரு இடங்களில் இன்று இடி மின்னலுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நீலகிரி கோவை மலை மாவட்டங்கள், திருப்பூர், தேனி திண்டுக்கல் தென்காசி திருநெல்வேலி கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் நாளை பலத்த மிக பலத்த மழை பெய்யக்கூடும் என்றும் இம்மையம் கூறியுள்ளது.

ழுழுழுழுழுழுழுழுழுழு

டென்னிஸ்

இத்தாலி கெய்பாவில் நடைபெறும் வெனிடோ ஓப்பன் டென்னிஸ் மகளிர் ஒற்றையர் காலிறுதியில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா – சுவிட்சர்லாந்தின் டீயனெநஉஉாஎ-யை இன்று எதிர்கொள்கிறாா.

லண்டனில் நடைபெறும் டென்னிஸ் சாம்பியன்பட்ட போட்டியின் ஆடவர் இரட்டையர் காலிறுதியில் இந்தியாவின் ரோஹன் போப்பன்னா, ஆஸ்திரேலியாவின் எப்டன் இணை – அமெரிக்காவின் குசவைணஇ ரஷ்யாவின் முாயஉாயழெள இணையை இன்று எதிர்கொள்கிறது.

ழுழுழுழுழுழுழுழுழுழு

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது

ழுழுழுழுழுழுழுழுழுழு